# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | O.S.No. 112/2013 | | | |
| **Name** | : | சுப்பிரமணி | **Father's Name** | : | முனியப்ப கவுண்டர் |
| **Witness for** | : | DW1 | **Calling** | : | |
| **Age** | : | | **Village** | : | |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 23.07.2025 administered by District Munsif, Uthangarai.

**துவக்க நேரம் – 12.25 PM**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் யாருக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் எனக்காக சாட்சியம் அளிக்கிறேன். வாதி என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை 4 ஆம் பிரதிவாதியின் பொது அதிகாரம் பெற்ற முகவராக தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். 4 ஆம் பிரதிவாதி யார் என்றால் சாந்தி. அவருக்கு முகவராக தான் இந்த பிரமாண வாக்கு மூலத்தை தாக்கல்செய்துள்ளேனா என்றால் ஆமாம். சாந்தியின் தந்தை பெயர் மாணிக்கம். வாதி அவரது தந்தைக்கு அவரது தாத்தா காவடி என்கிற பெருமாள் கவுண்டர் மூலம் வந்த சொத்துகளை பொறுத்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

மாணிக்கத்திற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 மகன்கள் , மகள் யாருமில்லை. வாதியின் தாயார் பெயர் சந்திரமதி. சந்திரமதியின் கணவர்தா்ன் மாணிக்கம் என்றால் இல்லை அவரது மணனவி பெயர் பச்சியம்மாள் ஆகும். சந்திரமதி மாணிக்கத்துடன் சிலகாலம் வாழ்ந்து வந்தார். மாணிக்கத்திற்கும் பச்சியம்மாளுக்கும் திருமணம் ஆனதுஎனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எவ்வாறு பச்சியம்மாள் மனைவி என்று கூறுகிறேன் என்றால் அவர்கள் கணவன் மனைவியாக

வாழ்ந்து வந்தது எனக்கு தெரியும். பச்சியம்மாள் சகோதரி சந்திரமதி என்றால் சரிதான். பச்சியம்மாளுக்கும் மாணிக்கத்திற்கும் திருமணம் நடைபெற்று குழந்தை இல்லாமல் இருந்தனர் என்பது தெரியுமா என்றால்தொரியாது. அவ்வாறு குழந்தை இல்லை என்பதால் சந்திரமதியை திருமணம் செய்து வாதி பிறந்த பின்பு தான் 2, 3 பிரதிவாதிகள் பிறந்தனர் என்றால் அது எனக்கு தெரியாது. வாதி பெரியவர் 2, 3 பிரதிவாதிகள் இளையவர்கள் என்றால் அது எனக்கு தெரியாது. எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு சந்திரமதியும் மாணிக்கமும் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்றால் அது எனக்கு நியாபகம் இல்லை. எத்தனை வருடம் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்றால் சுமார் 1 1/2 வருடம் இருக்கும். இப்பொழுது இருந்து சுமாார் எத்தனை வருடங்களுக்கு முன்பு அவர்கள் பிரிந்தனர் என்றால் அவர் பிரிந்து சென்ற பின்பு சுமார் 4 வருடங்கள் கழித்து மீண்டும் ஒன்று சேர்ந்தனர். தற்போது எத்தனை ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்தனர் என்றால் சுமார் 25 வருடம் இருக்கும். தற்போது சந்திரமதி எங்குள்ளார் என்றால் கல்லூரில் உள்ளார். 4 வருடமாக பிரிந்து எங்கு சென்றார் என்றால் அது எனக்கு தெரியாது.

நான் வாதியின் தந்தைக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் வேறு ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண் 70/2019 இல் இந்த வாதி தரப்பினராக சேர வேண்டும் என்று தாக்கல் செய்த மனுவில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால்சரிதான். அந்த சாட்சியத்தில் வாதி சாந்தி மாணிக்கத்தின் மகள் தான் என்று சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் அளித்துள்ளேன். அதற்கு மாறாக தற்போது சாந்தி மாணிக்கத்தின் மகளா என்று தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். மாணிக்கத்தின் வாரிசுகள் வாதியும் 2,3 பிரதிவாதிகளும் என்றால் வாதி வாரிசு இல்லை. என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் பத்தி 4 இல் தாவா சொத்துக்கள் பூர்வீகசொத்துக்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த தாவா சொத்துக்கள் 1 ஆம் பிரதிவாதி மாணிக்கத்திற்கு அவருடைய தந்தை பாகமாக கொடுத்தது என்று ஒப்புகொண்டுள்ளேன் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதிக்கும் அவரது

சகோரதரருக்கும் எப்போது பாகம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சாந்தியை மாணிக்கம் எப்பொழுது எந்த ஊரில் திருமணம் செய்து கொடுத்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சாந்தியின் கணவர் இறந்து விட்டார் என்பது எனக்கு தெரியும். அவர் எப்பொழுது இறந்தார் எந்த ஊரை சேர்ந்தவர் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாதியின் தாவாவில் உள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அவர் கணவர் இறந்த பின் கல்லூரில் வசித்து வருகிறார் என்பது எனக்கு தெரியும். 2,3 பிரதிவாதிகளுக்கு திருமணம் நடைபெற்றது எனக்கு தெரியாது.

வாதி தாவாவில் அவருக்கு 1990 ஆண்டு திருமணம் நடைபெற்று கே எட்டிப்பட்டி கிராமத்தில் வாழ்ந்த சமயத்தில் அவரது கணவர் இறந்து விட்டதால் கல்லூர் கிராமத்தில் தற்போது வசித்து வருவதாக கூறுவது சரியல்ல என்று எனது முதல் விசாரணையில் மறுத்துள்ளேன். தாவா சொத்தை மாணிக்கமும் அவரது வாரிசுகளும் அனுபவம் செய்து வருவதாக தாவா தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல மாணிக்கம் மட்டுமே அனுபவம் செய்து வந்தார் வாரிசுகளுக்கு எதுவும் பிரித்து கொடுக்கவில்லை. தாவாவை எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை எனது மனைவி பெயரில் தாக்கல் செய்துள்ளார். என்னன்ன சர்வே எண் நிலங்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும். என்னன்ன சர்வே எண் என்றால் 30/1, 19, 21 ஆகிய நிலங்களுக்கு தாக்கல் செய்துள்ளார் அதன் உட்பிரிவு எனக்கு நினைவில் இல்லை.

நான் கிரயம் பெற்ற நிலத்தின் சர்வே எண்.30/1 அதை யார் யாரிடமிருந்து கிரயம் பெற்றேன் என்றால் 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் கிரயம் பெற்றேன். நான் கிரயம் பெற்ற போது வாதி கணவர் வீட்டில் இருந்தார் என்றார் அது எனக்கு தெரியாது. வாதிக்கு தெரிந்து கிரயம் பெற்றனா என்றால் அவர் வாரிசு இல்லை என்பதால் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. நான் கூட்டு குடும்ப சொத்தை கிரயம் பத்திரம் ஏற்படுத்தி

கொண்டு வாதியின் பாகத்தை ஏமாற்ற அவர் வாரிசே இல்லை என்று பொய் வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. அவர் வாரிசு இல்லை என்று சொல்வதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் மோசடியாக கிரய ஆவணம் ஏற்படுத்தி கொண்டு வாதியை வாரிசு இல்லை என்று அவரின் தன்மானத்திற்கு கலங்கம் ஏற்படுத்தும் வகையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முறையாக கிரயம் பெறவில்லை என்றும் எனது கிரய பத்திரம் மோசடியானதும் என்று சொன்னால் சரியல்ல.

வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**முடிவு நேரம் – 01.15 PM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- XXXX

District Munsif(FAC),
Uthangarai.